மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | OS 189/2022 |
| பெயர் | : | பாக்கியராஜ் (Dw1) |
| த/பெ | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th day of July 2026

<u>1 வது வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் நிருபண வாக்குமூலத்தில் கொடுத்திருககிற முகவரிக்கு ஏற்ப எந்த வித அடையாள ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் தாக்கல் செய்துள்ள சொத்திற்கு கீழ்புறம் எனது தந்தையார் கோயில்பிள்ளைக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். வாதிகள் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் தாக்கல் செய்த os 87/2022 என்ற வழக்கு இதே நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது தாயார் 12.08.2010 ல் தான செட்டில்மெண்ட் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.1 ஆவணம் தான் தான செட்டில்மெண்ட் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தயாருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என கூறியிருக்கிறது என்றால் சரிதான். பூர்விகமா எனது தாயருக்கு பாத்தியப்பட்டது என எனது தாயர் பெயரில் எந்த பட்டேவோ ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) பி.வா.சா 1 ல் கண்ட சொத்தானது எனது தாயர் பெயரில் பாத்திய்பபட்டது அல்ல என்பதால் தான் என்னால் எனது தாயர் பெயரில் உள்ள வருவாய்துறை ஆவணங்களையோ பதிவுத்துறை ஆவணங்களையோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.1 ல்கண்ட சொத்தை எனது தயார் அனுபவித்து வந்ததாற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.1 ல் நத்தம் சர்வே எண் 402 செண்ட் 8.51 அளவுள்ள காலிமனை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.4 ஆவணத்தில் பாக்கியராஜ் மனைவி செல்வராணி என்று உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.4 ஆவணம் 2024 ல் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளுடைய வீட்டிற்கு கீழ்பக்கம் என்னுடைய அப்பா பெயரில் உள்ள வீட்டின் கதவு எண் 58 என்றால் சரிதான். கதவு எண் 58 கவர்னகிரி கிராமத்தில் அரசு கட்டிடம் தான் உள்ளது அது எனது வீட்டிற்கான கதவு எண் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் தாக்கல் செய்த பி.வா.சா.2 ஆவணம் எனது தகப்பனார் கோயில்பிள்ளை பெயரில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.4 ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கிற செல்வராணி என்பவர் எனது மனைவி என்றால் சரிதான். பி.வா.சா.. ஆவணங்கள் அனைத்தும் எனது பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா..3 ல் சொல்லப்பட்டிருக்கிற கதவு எண் 1/179 கொண்ட வீடானது எனது தகப்பனார் கோயில்பிள்ளையிடமிருந்து எனக்கு கிடைத்த வீடு என்றாலும் இந்த வழக்கில் வீண் குழப்பத்தை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணத்தில் எனது தகப்பனா்ர பெயரில் உள்ள மின்கட்டண ரசீதுகளையும் எனது மனைவி பெயரில் உள்ள கணிணி பட்டாவையும் என் தகப்பனார் பெயரில் சொந்தமான கதவு எண் 1/179 என்ற வீட்டின் தீர்வு ரசீதுகளையும் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

6) பி.வா.சா.2, 3 மற்றும் 4 ஆவணங்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் கிடையாது இந்த ஆவணங்கள் அனைத்தும் போலியாக உற்பத்திசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் தற்போது வீடு கட்டி குடியிருந்து வரும் சொத்தை பொறுத்து எனக்கு ஆட்சேபணை இல்லை என்று கூறினேன் என்றால் சரிதான். வாதிகள் உரிமைக்கோரிய இந்த சொத்து அவர்களது தாத்தா மூலம் கிரையம் பண்ணியது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கிற பி.வா.சா 1 ஆவணத்தில் நத்தம் சர்வே எண் 402 என்று தான் சொல்லப்பபட்டுள்ளது தவிர ச்ரவே எண் 613 ஐ பொறுத்தவரையில் எந்தவொரு வாசகமும் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கிலும் வாதிகள் தாக்கல் செய்த வழக்கிலும் சர்வே எண் 402 ல் எனது தாயாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என கூறவில்லை என்றால் சரிதான்.

7) எனது தயார் அனுபவத்தை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது தாயாரிடமிருந்து சர்வே எண் 402 யை பொறுத்து செட்டில்மெண்ட் அனுபவத்துவருவது பொய் நான் தாக்கல் செய்த தீர்வை ரசீதுகளும் பொய் என்றால் சரியல்ல.

8) பி.வா.சா.1 ல் உள்ள 402 ம் சர்வே எண் 613/1 ம் ஒரே சொத்து தான் என எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பட்டா தாக்கல்

செய்தேன். 613/1 ல் மொத்த எவ்வளவு இடம் உள்ளது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பி.வா.சா.1 ல் உரிமை கொண்டாடுகிற சொத்து 613 ல் வராது என்றால் சரியல்ல. எனது தயார் எழுதிக்கொடுத்த தான செண்டில்மெண்டில் ஆவணத்தில் கண்ட சொத்தை பொறுத்து என் பெயரில் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை என்றால் தாக்கல் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா4 ஆவணம் நான்சொல்லக்கூடிய பட்டா என்றால் என் பெயரில் இல்லை எனது மனைவி பெயரில் உள்ளது.

9) எனது மனைவி பெயரில் உள்ள பட்டவானது 613/23 என்ற சல்ச எண்ணுக்கு பாததியப்பட்டுது 613/1 ல் கிடையது என்றால் சரிதான். எனது மனைவி பெயரில் உள்ள பட்டாவானது 2 1/2 செண்ட்ல் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தயார் எனக்கு எழுதிக்கொடுத்த சொத்து 8 1/2 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதிக்கு மட்டும் தான் வருவாய்துறை ஆவணமோ பதிவுத்துறை மூலமாக ஆவணங்கள் இருக்கிறது நான் போலியாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்குசொத்தில் எனக்கு எனது தாயருக்கோ எந்த வித அனுபமும் ஏற்பட்டதுகிடையது என்றாலும் போலியாக பி.வா.சா.1 ஆவணத்தில் உற்பத்தி செய்து வாதிக்கு இடைஞ்சல் செய்து வருகின்றேன் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்திருக்கிற் 189/2022 ல் என்ற வழக்கு அனுமதிக்கபடவேண்டும் நான் தாக்கல் செய்திருக்கிற வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/– Tr.A. Dharanidharan
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.